மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2020 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23ம் நாள் திங்கட் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திரு.ஓ.சங்கர்தாஸ், உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 406/2014 வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. தனலட்சுமி | வயது | .. |
| த/பெ. | .. | சாதி | .. |
| கிராமம் | .. | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

23.11.2020 - வா.சா.1ஐ 24ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

அருளப்பன் என்பவர் எனது தந்தையின் பாட்டனார். அருளப்பன் என்பவருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் ஜோசப் என கூறிவிட்டு பிறகு சாட்சி மாற்றி கரியப்பன் மற்றும் சுப்பராயன் ஆகியோர் வாரிசுகள் என கூறினார். மேற்படி கரியப்பன் மற்றும் சுப்பராயன் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி இருவரும் இறந்ததற்கு சான்றாக இறப்பு சான்றிதழ் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஜோசப் என்ற பஞ்சநாதன் எனது அப்பா. 1ம் பிரதிவாதி அன்னம்மாள் எனது தாயார் ஆவார். 1 மற்றும் 3ம் வாதிகள் எனது சகோதரிகள் ஆவார்கள். 2ம் பிரதிவாதி பாலன் எனது அண்ணன் ஆவார். 3, 4, 5ம் பிரதிவாதிகள் இறந்துபோன எனது அண்ணன் கோகிலன் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். முத்து எனது சித்தப்பா. 7ம் பிரதிவாதி லூர்து எனது சித்தி. 8 முதல் 12 பிரதிவாதிகள் எனது சித்தப்பா முத்துவின் வாரிசுகள் என்றால் சரிதான். இவர்கள் இல்லாமல் எனது சித்தப்பா முத்துவிற்கு முனியம்மாள், அஞ்சலி என்ற இரண்டு மகள்கள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாவாவிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி முனியம்மாள் மற்றும் அஞ்சலி ஆகியோரை இறந்து விட்ட எனது சித்தப்பாவின் வாரிசுகள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முனியம்மாள், அஞ்சலி ஆகியோர் இறந்து விட்டதால்

அவர்கள் முத்துவின் வாரிசு இல்லை என்று சொல்கிறேனா என்றால் முனியம்மாள் அஞ்சலி என



வாரிசுகள் இல்லை. வழக்கு விவரம் குறித்து நானும் எனது சகோதரிகளும் தான் வழக்கறிஞரிடம் கூறினோம் என்றால் சரிதான். 2 சர்வே எண்களுக்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 ஏக்கர் 44 செண்ட் இடத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சொத்திற்காக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு சொத்திற்காக அல்ல. வா.சா.ஆ.1 20.3.2013 தேதியிட்ட சிட்டா நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதில் சுப்புராய்ன மக்கள் ஜோசப், முனுசாமி, ஏகாம்பரம் என்று உள்ளது. முனுசாமி என்பது தவறு. முத்து என்பது தான் சரி. எனது முப்பாட்டன் அருளப்பன் சுமார் 80 வருடங்களுக்கு முன்பு இறந்து இருக்கலாம். அருளப்பனுக்கு பிறகு அவரது மகன்களான சுப்புராயன் கரியப்பன் ஆகியோர் சுமார் 50 வருடங்களாக கூட்டாக அனுபவித்து வந்தார்கள். கூட்டாக அனுபவித்து வந்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தா சுப்பராயன் அவரது சகோதரன் கரியப்பன் ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டார்என்றால் சரிதான். எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் 2 சர்வே எண்களில் பாகம் பிரித்துக்கொண்டார்கள். எவ்வளவு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று தெரியாது. சுப்பராயன் என்பவருக்கு 1 ஏக்கர் 8 1/2 செண்ட் நிலம் கரியப்பன் என்பவருக்கு அதே அளவு நிலம் பாகம் பிரித்துக்கொண்டார்கள். மேற்படி சுப்பராயன், கரியப்பன் என்பவர்கள் பாகப்பிரிவினைக்கு பின்பு தனித்தனியாக அவரவர் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பஞ்சநாதன், முத்து, ஆறுமுகம் ஆகியோர்கள் எப்போது பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள், எவ்வளவு பாகப்பிரிவினை என்றால் மேற்படி மூவரும் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை. கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார்கள். எவ்வளவு நாட்கள் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் எனது தந்தை 1994ல் இறந்து போனார், அதுவரை கூட்டாகத்தான் அனுபவித்து வந்தார்கள். அதன் பிறகு 1 ஏக்கர் 8 1/2 செண்ட் நிலத்தை எனது தந்தை மற்றும் அவரது இரு சகோதரர்களுக்கு உண்டான பாகம் தலா 36 செண்ட் வீதம் அவர்களது வாரிசுகள் பாகம் பிரித்துக் கொண்டோம். என்னென்ன சர்வே எண்ணில் எவ்வளவு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று கூற முடியுமா என்றால் 2 சர்வே எண்களில்

பாதி பாதியாக பாகம் பிரித்துக்கொண்டோம். சர்வே எண் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினைக்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை



இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது சித்தப்பா முத்து இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது சித்தி லூர்து உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. லூர்து என்பவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளான முனியம்மாள், அஞ்சலி ஆகியோரை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து இருக்க வேண்டும் என்றால் அவ்வாறு யாரும் இல்லை. எனது வயது 45. எனக்கு 1989ல் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு பெங்களூருவில் வசித்து வருகிறேன். அடிக்கடி என் தாய் வீட்டிற்கும் வந்து செல்வேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது 2014ல் பெங்களூருவில் தான் இருந்தேன். 1, 2 மற்றும் 6ம் பிரதிவாதிகள் 25ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் வா.சா.ஆ.3ன் மூலம் கொடுத்தது எனக்குத் தெரியாது. ஊருக்கு வந்த பிறகு தான் பிரச்சினை என்பது அப்போது தான் தெரியும். அந்த பொது அதிகாரத்தின் அடிப்படையில் 25ம் பிரதிவாதி 19ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி கிரையம் கொடுக்கப்பட்ட இடத்தில் அருணாச்சலம் இன்ஜினியரிங் கல்லூரி இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது அங்கு அந்த கல்லூரி கட்டப்பட்டிருந்தது. 2014ல் நான் சிட்டா வாங்கி பார்க்கும்போது எங்களுடைய இடத்தில் 29 பேர்கள் கிரையம் வாங்கியிருப்பது தெரிய வந்தது. அந்த சிட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனது தாய் அன்னம்மாள், சகோதரர் பாலன் என்பவர்கள் 22ம் பிரதிவாதி குமரவேல் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 13.5.2013 அன்று வா.சா.ஆ.8 முன்னிலைக்கு குமாரி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றாலும் வா.சா.ஆ.8 முன்னிலைக்கு ரவிச்சந்திரன் என்பவருக்குத் தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் நான் யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.9 22.11.2007 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையம் குறித்து எனக்குத் தெரியாது. எப்போது தான் கிரையம் கொடுத்தது எனக்குத் தெரியும் என்றால் எனது சொத்தில் நான் எப்போதும் கிரையம் கொடுக்கவில்லை. வா.சா.ஆ.10 2.9.2010 தேதியிட்ட

கிரையப்பத்திரத்தின் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1, 2, 4, 9, 10, 11 ஆகிய ஆவணங்கள் எங்கிருந்து பெறப்பட்ட ஆவணத்தில் இருந்து நகல் எடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணங்களின் நகல்கள்



மட்டுமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12, 1.10.2010 தேதியிட்ட கிரையப்பத்திரம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12ன்படி கிரையம் கொடுத்தது சரிதானா என்றால் அவர்களது சொத்தை அவர்கள் கிரையம் கொடுத்திருக்கலாம். முத்துவின் மகன் தான் முனுசாமி. முத்துவின் மகன் முனுசாமி என்பவரிடமிருந்து தான் 24ம் பிரதிவாதி குமாரி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் எனவே அது சரிதான் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.15 மற்றும் 16 ஆகிய கிரைய ஆவணங்கள் சரிதானா என்றால் அவர்களது சொத்தை அவர்கள் கிரையம் கொடுத்திருக்கலாம். அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.14, 14.3.2014 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகலில் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு கிரையம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றாலும் அது போன்று கிரையம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் செல்லாது என பரிகாரம் கோரப்படவில்லை, அதற்குண்டான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி பரிகாரம் கோராமல் நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நீதிமன்றக்கட்டணம் செலுத்தியுள்ளேன். வழக்கு சொத்து குறித்து மதிப்பீடு சரியாக செய்யப்படவில்லை என்றாலும் அதற்குண்டான நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. 24ம் பிரதிவாதி குமாரி என்பவர் முனுசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தை அவர் கிரையம் பெறுவதற்கு முன்பாக முனுசாமி என்பவரின் பெயரில் 343 என்ற எண்ணில் பட்டா இருந்து வந்து அவருடைய அனுபவத்தில் இருந்து வந்த பிறகு அவரிடமிருந்து கிரையம் பெற்றது செல்லும் என்றால் சரியல்ல. முனுசாமிக்கு முன்பாக முனுசாமியின் தந்தை முத்து என்பவர் வாய்மொழியாக பாகம் வந்து அவர் அனுபவித்து வந்து அதன் பிறகு விற்பனை செய்ததால் அந்த விற்பனை செல்லும் என்றால் சரியல்ல. 15.11.2007 முதல் கிரையப்பத்திரம்

பதிவு செய்யப்பட்டுள்ளது அதிலிருந்து 3 வருடத்திற்குள்ளாக நான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு இல்லாமல் காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன் என்றால் சரியல்ல. சரியான காரண, காரியங்கள் இல்லாமல் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும்



அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/-D.Ravi,
District Munsif,
Polur.